**மாகாணக் கல்வி திணைக்களம் சபரகமுவ – வார பாடசாலை**

**பாடம் - அரசியல் விஞ்ஞானம்**

**தரம் - 12 (2022)**

**வாரம் - 3**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

**01 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க**

01. அரசு என்பது
1. அது எப்பொழுதும் சமூகத்திற்காகப் பேசுகிறது.
2. அது பருமனிலும் அதிகாரத்திலும் வேறுபடுகிறது.
3. அது சமூகத்தை நிர்ப்பந்திக்கும் சக்தி கொள்கிறது.
4. அது சமூகத்தில் கவனம் செலுத்தாத துறைகள் எதுவும் காணப்படுவதில்லை.
5. அது சர்வதேச அரசியலில் பிரதம செயற்பாட்டு நிறுவனமாகச் செயற்படுகிறது. (……)

02. இறைமை என்பது
1. அது ஒருமையானதாகும்.
2. அது பிரிக்கமுடியாதாகும்.
3. அது தனி முதன்மையானதாகும்.
4. அது பாரதீனப்படுத்தக்கூடியதாகும்.
5. அது அரசின் ஆக்கக்கூறுகளுள் முக்கிய மூலமாகும். (……)

03. நகர அரசின் மூலக்கொள்கை
1. கி.மு 7ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றதாகும்.
2. சமத்துவமற்ற அரசியல் சமூகத்தைக் கொண்டிருத்தல்.
3. பல்வேறு அரச மாதிரிகளைக் கொண்டிருத்தல்.
4. பிரசைகளின் அரசாங்கம் செயற்படுதல்.
5. வரம்பற்ற குடியுரிமை காணப்படுதல். (……)

04. தாராள ஜனநாயக அரசொன்றின் அடிப்படைப் பண்புகளாவன.
1. அது தற்காலிகமானதாகும்.
2. அது நிரந்தரமானதாகும்.
3. அது இலாபநோக்குடையதாகும்.
4. அது இயற்கையில் விளைவினதாகும்.
5. அது பொதுநலனின் பாதுகாவலனாகும்.

(……)

05. காலனித்துவ அரசின் பிரதான பண்புகளாவன.
1.அது ஓர் இராணுவ ஆட்சியாக இருத்தலாகும்.
2.அது குடியேற்றவாதக் கோட்பாடுகளை கரிசனையுடன் நடைமுறைப்படுத்துவதாகும்.
3.அது மத்தியமயப்படுத்தப்பட்ட நிர்வாக மற்றும் இராணுவக் கட்டமைப்பைக் கொண்டிருத்தலாகும்.
4.அது குடியேற்ற நாட்டுச் செல்வங்களைச் சுரண்டுவதில் கண்ணும் கருத்துவமாக இருத்தலாகும்.
5.அது ஒரு அரசியல் யாப்பு விதிமுறையின் படி செயற்படுவதாகும்.

(……)

06.தோமஸ் ஹொப்சின் இயற்கைச் சமூகம்.
1. சுயநலன்மிக்கவனாக வாழ்ந்தமை.
2. நாகரியமானவனாக வாழ்ந்தமை.
3. காட்டுமிராண்டித்தனம் கொண்டவனாக இருந்தமை.
4. குறைந்த ஆளுமை கொண்டவனாக இருந்தமை.
5. நல்லது கெட்டமை அறிய தகைமையற்றவனாக இருந்தமை. (……)

07.அரசியல் கட்சி என்பது,
1. சமூகச் சீர்திருத்தத்தின் பிரதான முகவர்களாகும்.
2. அரசியல் சமுதாயப்படுத்தலின் பிரதான முகவர்களாகும்.
3. அரசியல் விளையாட்டில் ஈடுபடும் பிரதான முகவர்களாகும்.
4. பொதுசன அபிப்பிராயத்தை திரட்டும் பிரதான முகவர்களாகும்.
5. அரசாங்கத்தின் மீது அமுத்தத்தைப் பிரயோகிக்கும் முகவர்களாதும். (……)

08. அரசியல் என்பது
1. பிரஜைகளின் பங்குபற்றுதலுடன் தொடர்புடைதாகும்.
2. மோதல் தீர்வை முன்வைக்கும் கற்கையுடன் தொடர்புடையதாகும்.
3. அதிகாரத்தைக் கைப்பற்றல் மற்றும் பரவலாக்கலுடன் தொடர்புடையதாகும்.
4. யார், எதை, எவ்வாறு எப்பொழுது பெறுபவர் என்ற செயற்பாட்டுடன் தொடர்புடையதாகும்.
5. வாக்கினால் மேற்கொள்ளப்படும் அதிகாரப் போரட்டத்துடன் தொடர்புடையதாகும். (……)

09.அரசறிவியலில் இடம்பெறும் விடயங்களாவன,
1. குற்றவியல் சட்டங்களாகும்.
2. வாக்காளரின் நடத்தையாகும்.
3. யுத்தமும் சமாதானமுமாகும்.
4. சர்வதேச மோதல்களாகும்.
5. அரசியற் கட்சிகளின் செயற்பாடாகும். (……)

10. சமஷ்டியாட்சி என்பது
1. இரு மட்டங்களிலான அரசாங்கங்கள் இருக்கும்.
2. ஒரு மையத்தில் அதிகாரம் குவிந்திருக்கும்.
3. அரசியல் யாப்பு அதி உயர்வானதாகக் கருதப்படும்.
4. அதிகாரப் பங்கீட்டின் அடிப்படையில் தாபிக்கப்பட்டதாகும்.
5. சகல மக்களும் இரு அரசாங்கங்களுக்கும் அடிபணிவினை வழங்குவார்கள். (……)

11. மந்திரிசபை அரசாங்க முறை என்பது.
1. உண்மை நிர்வாகியால் தலைமை தாங்கப்படுகிறது.
2. உண்மை நிர்வாகியால் நாமநிர்வாகி நியமிக்கப்படுகிறது.
3. ஜனநாயகத் தன்மைகொண்டதாக இருக்கிறது.
4. செயற்றிறன் குன்றிய அரசாங்க முறையாக இருக்கிறது.
5. நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்குப் பொறுப்புடையதாக இருக்கிறது. (……)

12.ஜனாதிபதி அரசாங்க முறை என்பது.
1. கூட்டுப் பொறுப்பற்ற அமைச்சரவைக் கொண்டதாகும்.
2. அனைத்து விடயங்களும் ஜனாதிபதியின் பெயரிலேயே நடைபெறுவதாகும்.
3. அரசியல் முடிவுகள் விரைவானதாக இருப்பதாகும்.
4. கட்சி அரசாங்கமுறை நடைமுறையிலிருப்பதாகும்.
5. உறுதி மற்றும் செயற்றிறன் கொண்டதாக இருத்தலாகும். (……)

13. அனைத்தாண்மை அரசாங்க முறை என்பது
1. தனிநபர் கைகளில் அரச அதிகாரம் குவிந்திருக்கும்
2. சட்டத்திற்குக் கீழ்படியாத தன்னிகரற்ற ஆட்சிமுறை கொண்டதாக இருக்கும்.
3. ஜனநாயகத்தை முழுமையாக எதிர்க்கும் ஆட்சிமுறையாக இருக்கும்
4. அரச தனியுரிமை ஊடகத்துறையில் காணப்படும்.
5. ஜனநாயக செயன்முறைகளை உள்வாங்கிய ஆட்சிமுறையாக இருக்கும். (……)

14. மதசார்பற்றவாதம் என்பது
1. அரசியல் வேறு சமயம் வேறு என்ற சிந்தனையாகும்.
2. திருச்சபையும் அரசையும் வேறுபடுத்தும் சிந்தனையாகும்.
3. தனியாள் சுதந்திரம் மற்றும் சமய சுதந்திரமாகும்.
4. சமயக் கற்கை மற்றும் பிரச்சாரத்திற்கு அரச ஆதரவு கிடைத்தலாகும்.
5. சிந்தனை மற்றும் மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரமாகும். (……)

15. முரண்பாட்டுத்தீர்வு ஊடகங்களாவன
1. தீர்ப்புக்கூறலாகும்.
2. மத்தியஸ்தமாகும்.
3. இணக்கப்படுத்தலாகும்.
4. சமாதான உடன்படிக்கையாகும்.
5. சமாதானத்தைக் கட்டியெழுப்புவதாகும் (……)